DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 880/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.தெரசா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.பார்த்தசாரதி |
| Village | : | மண்டலக்கோட்டை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 17.05.2023

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் மண்டலக்கோட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 08.09.2021ம் தேதி காலை 06.00 மணியளவில் பக்கத்து வீட்டில் உள்ளவர்களுக்கு நான் பத்திரிக்கை கொடுத்துவிட்டு நான் திரும்பி வந்து

கொண்டிருந்தபோது என்னை பார்த்து ஆஜர் எதிரி இந்த பாதையில் இனிமேல் வந்தால் காலை நறுக்கிவிடுவேன் என்று சொன்னார்.

2. நான் அதற்கு இது உன் பாதை இல்லை பொது பாதை என்று சொன்னேன். அதற்கு ஆஜர் எதிரி உன் காலை, கையையும் ஒடிக்கிறேன் என்று சொன்னார். அதன்பிறகு நான் சென்றுவிட்டேன்

3. நான் எனது இடத்தில் 08.30 மணியளவில் கூட்டிக் கொண்டுஇருந்தபோது அங்கு வந்து ஆஜர் எதிரி என்னை தேவிடியா முண்டை, அவுசாரி முண்டை என அசிங்கமாக வார்த்தைகளால் பேசி எனது தலைமுடிய பிடித்து சுண்டி, சுண்டி இழுத்தார்கள் என்னால் பிடிக்க முடியாமல் திமிர முடியாமல் இருந்தேன்.

4. பின்னர் பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து விலக்கினார்கள். விலக்கியவர்களை ஆஜர் எதிரி நான் நாலு கோடு பார்ப்பவர்கள் என்று சொல்லி நீங்கள் விலக்கினால் உங்கள் மீது FIR போடுவோம் என்று சொன்னவுடன் விலக்க வந்தவர்கள் ஓடிவிட்டார்கள். விலக்கியவர்களை அனைவரையும் கேஸ் கொடுப்பேன் என் சொன்னார்.

5. பின்னர் ஆஜர் எதிரி என்னை பிடித்து தள்ளியதில் நான் தகரக் கதவில் போய் விழுந்துவிட்டேன். எனக்கு உள்காயங்கள் இருந்ததால் நான் திருவாடானை அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்தேன். நான் மேற்படி மருத்துவமனை வந்து 10 நாட்களாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பின்னர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன்

6. நான் எஸ்.பி.பட்டிணம் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் அளித்த புகார் தான் அது. **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நானும் ஆஜர் எதிரியும் பக்கத்து, பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக ரொம்ப காலமாக எங்களுக்குள் பிரச்சனை உள்ளது என்றால் ஒருவருடமாக பிரச்சனை உள்ளது.

2. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் புகாரை நான் தான் கைப்பட எழுதினேன்.

3. புகார் எந்த தேதியில் அளித்தேன் என்றால் 08.09.2021ம் தேதி அளித்தேன். அன்றைய தினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் அது தெரியாது

4. சம்பவத்ததன்றே போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னை சார்பு ஆய்வாளர் சுதர்சன் விசாரித்தார். நான் அளித்த புகார்மனுவில் தேதியில் அடித்தல் திருத்தல் காணப்படுகிறது என்றால் சரிதான்.

5. பாதை சம்பந்தமாக நான் எதிரி மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஞான பிரகாசம் மற்றும் எதிரி தரப்பினருக்கு பாதை சம்பந்தமாக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்படி ஞானபிரகாசம் இவ்வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். ஆஜர் எதிரியையும் அவரது மகளையும் நான் அடித்து அவர் திருவாடானை மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து என்மீதும் என் மகன் நிரஞ்சன் மீதும் எஸ்.பி.பட்டிணம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பத்து பேர்கள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளார்.

7. நான் எந்த தேதியில் சிவகங்கையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் நவம்பர் மாதம் வாக்கில் சிகிச்கை எடுத்துக் கொண்டேன். திருவாடானை அரசு மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்கையில் இருந்துவிட்டு சென்றுவிட்டேன்.

8. சம்பவத்தன்று விசாரித்தற்கு பிறகு என்னை மீண்டும் போலிசார் விசாரணை செய்யவில்லை. நான் சொன்னதுபோல சம்பவம் நடைபறெவில்லை என்றாலும், நானும் எனது மகளும் தாக்கி தான் எதிரிக்கு அதிக காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9. ஆஜர் எதிரி மீது உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு ஆஜர் எதிரி மீது பொய் புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 880/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சிங்காரம் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.சிலுவேசு |
| Village | : | மண்டலக்கோட்டை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 17.05.2023

---

**முதல் விசாரணை**

1. நான் மண்டலக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும்.

2. சுமார் ஒனறரை வருடங்களுககு முன்பாக காலை 07.00 மணியளவில் அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரி அவரது வீட்டின் முன்பு சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள். நான் அந்த பாதை வழியாக விவசாயத்திற்காக சென்றேன். நான் இருவரும் சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள் நான் இருவரிடமும் அடித்துக் கொள்ளாதிர்கள் என்று சொன்னேன் . நான் விலக்கி விட்டேன்.

3. ஆஜர் எதிரி உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னார். பின்னர் நான் சென்றுவிட்டேன் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1 நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். ஆஜர் எதிரிக்கும் அ.சா.1 ற்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை இருந்தது தெரியுமா என்றால் எந்த இடப்பிரச்சனை என்று தெரியாது.

2. நான் சம்பவம் நடந்தவுடன் விலக்கி விட்டு சென்றவிட்டேன். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 880/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஞானபிரகாசம் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.அருளானந்து |
| Village | : | மண்டலக்கோட்டை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 17.05.2023

---

**முதல் விசாரணை**

1. நான் மண்டலக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும் அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும்.

2. 08.09.2021ம் தேதி காலை 08.30 மணியளவில் நான் டீ சாப்பிட்டு விட்டு வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அ.சா.1ன் தலைமுடியை பிடித்து அடித்து தள்ளி விட்டார்.

3. அ.சா.1 கதவில் போய் விழுந்துவிட்டார். நான் அதுவரை பார்த்தேன் பின்னர் நான் நிற்காமல் சென்றுவிட்டேன், போலிசார் என்னை விசாரிக்கவில்லை

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் சண்டையை நேரடியாக பார்த்தேன். நான் சண்டையை பத்து அடி துாரத்தில் இருந்து பார்த்தேன் நான் சண்டையை விலக்கவில்லை.

2. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சண்டையை யார் யாருக்கு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல